மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஊதியம் அளிக்கப்பட்டு விட்டது என்பதற்குத் தகவல் இருக்கிறது. ஏன் அப்படி தாமதம் ஏற்பட்டது என்பதற்குத் தகவல் இல்லை. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருப்பத்திற்கிணங்க அதைப் பற்றிப் பரிசீலித்து இனிமேல் இதேபோல் தாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு அரசு பார்த்துக் கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெரேனியம் பயிரிடல்

* வினா 66—திரு. கே. உச்சி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

நீலகிரி மாவட்டத்தில் ஜெரேனியம் என்ற வாசனைத் தைல செடிகளை வளர்க்க அரசு தீவிர நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தமிழ்நாடு அரசு சின்கோனாத்துறை ஏறத்தாழ 15 வருடங்களாக நீலகிரியில் ஜெரேனியம் பயிரிட்டு வருகிறது. தற்போது 220 ஹெ. பரப்பளவில் ஜெரேனியம் பயிரிடப்பட்டுள்ளது. அடுத்து ஐந்து ஆண்டுகளில் மேலும் 106 ஹெ. பரப்பளவில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. கொடைக்கானல் பகுதியில் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. உச்சி: இந்த ஜெரேனியம் நல்ல லாபம் தரக்கூடிய ஒரு விவசாயம். அதனால் ஏராளமான வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப்பட்டு அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. ஆகவே, அதை அதிகமாக பரவலாகப் பயிர் செய்வதற்கு அந்த விவசாயிகளுக்கு அரசாங்கம் ஏதாவது மானியம் அளிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்புகள் இப்போது என்னிடம் இல்லை. இருந்தாலும் சின்கோனாத் துறை அரசு தரப்பில் நடத்தப்பட்டு வருகிற ஒரு துறையாகும். அதற்கு உதவியாக விவசாயிகள் பயிரிடுகிற—ஜெரேனியம் நல்ல முறையில் லாபத்தைத் தருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அது சம்பந்தமாகக் கவனித்து விவசாயிகளுக்கு தக்க ஊதியம் வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: இந்த சின்கோனாத் துறையில் பணியாற்றுகிற பலர் தற்காலிக ஊழியர்களாக ஆறு ஏழு ஆண்டுகளாக வேலை வாங்கப்படுவதாகத் தெரிய வருகிறது. அவர்களை நிரந்தரமாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? மழை காலங்களில்

1978 செப்டம்பர் 7]

அவர்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைப்பது மிக சிரமமாக இருப்பதால், அப்படியே கிடைத்தாலும் அதிக விலைக்கு வாங்க வேண்டிய அவல நிலை இருப்பதாகவும் தெரியவருகிறது. அதையும் போக்க இந்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, கேள்வி ஜெரேனியம் அதிக அளவில் பயிரிடப்படுமா என்பது பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற விவரங்களுக்குத் தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துச் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, ஜெரேனியத்தை இப்போது சிங்கோனா டிப்பார்ட்மென்ட் பயிரிட்டு வருகின்றதாகச் சொன்னார்கள். இதை மாற்றி இந்தோ-ஜெர்மனித் திட்டத்தின் கீழ் உள்ள இலாகா மூலமாக இதைச் செய்வதற்கு அரசு பணிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்த யோசனையையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர் இடைநிலைப் பள்ளிகள்

* வினா 67—திரு கோ. இளங்கோவன், திரு. மு. அம்பிகாபதி, திரு. என். கிட்டப்பா.— மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாநிலம் முழுவதும் எத்தனை உயர்நிலைப் பள்ளிகளில் Higher Secondary Education-க்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது?

(ஆ) வசதி செய்யப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் அரசு உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) மாநிலம் முழுவதும் 874 உயர் நிலைப்பள்ளிகளில் மேல் நிலைப் பள்ளிக்கல்வி (ஹையர் செகண்டரி) தொடங்க இதுவரை அனுமதிக்கப்பட்டுள்ளது, இவைகள் தவிர 24 ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளிலும், 18 மெட்ரிக்குலேஷன் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிக் கல்வி தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேல்நிலைப்பள்ளிக் கல்வி தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ள அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை 413.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, தலைமை ஆசிரியர்கள் நியமனத்தில் தனியார் மேல்உயர்நிலைப்பள்ளிகளிலும் அரசு மேல் உயர்நிலைப் பள்ளிகளிலும் ஒரேவிதமான விதிமுறைகள் கையாளப்படுகின்றதா? 'ஏ' விங் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பதவிகள் காலியாக இருந்தால் அதில் 'பி' விங் ஆசிரியர்களை நியமிக்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா? தெரியுமென்றால் இதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?